திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஏழை எளியோர்களுக்கான இன்ஷூரன்ஸ் திட்டங்கள், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில் ஏதாவது, நமது அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி யபோடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 56, திரு. கு. தங்கமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

56—

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை

*9473—திரு. கு. தங்கமுத்து: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நெற்பயிர் பூச்சி தாக்குதலினால் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதைக் கட்டுப்படுத்த அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டத்தில் நெற்பயிர்கள், பூச்சித் தாக்குதலினால் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. கு. தங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை முட்டைப் பருவத்திலோ

1992 செப்டம்பர் 23]

வேறு சில அடையாளங்களை வைத்தோ தாக்குதலுக்கு முன்னாலேயே கண்டுபிடித்து விடமுடியும். எனவே வேளாண்மைத் துறை அலுவலர்களால் எல்லோரும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பகுதி பகுதியாக இல்லாமல் ஒரு முழுமையான பகுதி அனைத்தையும் பாதுகாப்பு நடவடிக்கையாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெற்பயிர் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த, பூச்சிநோய் நிலை குறித்து வாராந்திர கணிப்பு செய்து, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி வல்லுநரிடம் ஆராய்ச்சி செய்யப்பட்டு, அதன் விவரத்தை விவசாயிகளுக்கு முன்னெச்சரிக்கையாக துண்டுப் பிரசுரங்கள், பத்திரிக்கை, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவைகளின் மூலமாக அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பிற்காகவும், பூச்சி நோயிலிருந்து பயிர்களைக் காப்பதற்கும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், இருநாள் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தவிர, 50 சதவிகிதம் மானியத்தில் மருந்து தெளிக்கும் கருவிகளும், பூச்சி மருந்து மற்றும் பூச்சி நோயைக் கட்டுப்படுத்த 25 சதவிகிதம் மானியத்தில் மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 57, திரு. எஸ். அண்ணாமலை, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

57—

சூளைப்பள்ளம் பகுதியில் குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடிக் கட்டிடம்.

* 9963—திரு. எஸ். அண்ணாமலை: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) எம்.ஜி.ஆர். நகரில் உள்ள சூலைப்பள்ளம் பகுதியில் வசிக்கும் குடிசைவாழ் மக்கள் மழைக் காலத்தில் வெள்ளப் பெருக்கினால் சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிசை மாற்று வாரியம், அப்பகுதியை உயர்த்தி, அடுக்குமாடிக் கட்டிடம் கட்டித்தர முன்வருமா?